# ஸ்ரீ பாலமுருகன் தேவஸ்தான அறக்கட்டளை

## Sri Balamurugan Devasthanam Trust

(Regd. No. A 2354)

# 53-ஆம் ஆண்டு பங்குனி உத்திரப் பெருவிழா

## 53rd Panguni Uthiram Festival



**11-3-2019**
**Monday**
**to**
**21-3-2019**
**Thursday**

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
எவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி ! போற்றி !

– கந்தபுராணம்

Suryanagar, Hatkeshwar Circle, Ahmedabad-380026.
Contact : 079-25853367
E-mail : sribalamurugan.ahm@gmail.com
Web : www.sribalamurugan-ahm.org

உ

அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் துணை

# நிதிவேண்டுகோள் !

இறைநிறை பெரியீர் !

தமிழ் மொழிக்கு தலைவன் முருகன், முருகு என்றால் அழகு என்று பொருள். நம் தமிழ் மொழியின் தலைவனாக விளங்கும் முருகப் பெருமான் குஜராத் மண்ணில் அகமதாபாத் நகரிலே பாலமுருகன் என்னும் பெயருடன் அமர்ந்து நமக்கெல்லாம் அருள்பாலித்து வருகிறார். இந்த ஆலயத்தில் ஸ்ரீ பாலமுருகனுடன், ஸ்ரீ பாலகணபதி, ஸ்ரீ நீலகண்டேஸ்வரர், ஸ்ரீ திரிபுர சுந்தரி, ஸ்ரீ தட்சணாமூர்த்தி, ஸ்ரீ துர்கை, ஸ்ரீ ஐயப்பன் நவகிரக பரிவாரங்களுடன் கோயில் கொண்டு அருள் புரிந்து வருகின்றனர். மேலும் நம் ஆலயத்தில் பங்குனி உத்திரப் பெருவிழா பல ஆண்டு காலமாக சிறப்பாக நடந்து வருகின்றது.

**53 ஆம் ஆண்டு பங்குனி உத்திரப் பெருவிழா** நிகழும் ஸ்ரீ விளம்பி வருடம் **மாசி மாதம் 27-ஆம்** நாள், **11-03-2019** திங்கட்கிழமை முதல் **பங்குனி மாதம் 7-ஆம்** நாள் **21-03-2019** வியாழக்கிழமை வரை **11 நாட்கள்** சிறப்புடன் நடைபெற உள்ளது.

குஜராத் மாநில தமிழ் மக்களின் கலை-கலாச்சாரம்-பக்தி நெறிகளின் சிகரமாக விளங்குவது அகமதாபாத் ஸ்ரீ பாலமுருகன் திருக்கோயில் ஆகும். பக்தர்களின் பால்காவடி, புஷ்பக்காவடிகளின் கண்கொள்ளாக் காட்சியோடு, பால்குடம் சுமந்து அலகு குத்திய பக்தர்களின் பக்திக் காட்சிப் பெருக்கினைக் காண கண் கோடி வேண்டும். அனைவரும் **53-ஆம் ஆண்டு பங்குனி உத்திரப் பெருவிழா** சீரும் சிறப்புமாக நடைபெற தாங்கள் மேலான ஒத்துழைப்பும், நன்கொடையும் நல்கிட நல்லன்புடன் வேண்டுகிறோம்.

பங்குனி உத்திரப் பெருவிழா நாள் அன்று காலை 7:00 மணிக்கு 108 பால் குடங்களுடன் 401 திருக்காவடிகள் ஊர்வலமும், காலை 11:00 மணிக்கு 508 லிட்டர் பால் அபிஷேகமும், இரவு 8:00 மணிக்கு ஸ்ரீ பாலகணபதி மூஷிக வாகனத்திலும், ஸ்ரீ பாலமுருகன் மயில் வாகனத்திலும் அமர்ந்த திருக்கோலத்துடன் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு **பண்ருட்டி இளம் சுடரொளி வாத்திய விசாரத R. பிரபு குழுவினரின் நாதஸ்வர இன்னிசையுடன்,** வாணவேடிக்கைகளுடன் திருவீதியுலாவும் நடைபெறும்.

**அனைவரும் வருக !**
**ஸ்ரீ பாலமுருகன் அருள் பெறுக !!**



**இப்படிக்கு,**
**அறங்காவலர்கள் - விழாக்குழுவினர்கள்**

# 53-ஆம் ஆண்டு பங்குனி உத்திரப் பெருவிழா நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| 11-03-2019 | திங்கள் | காலை 6:00 மணிக்கு | ஸ்ரீ கணபதி ஹோமம் |
| | | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| 12-03-2019 | செவ்வாய் | காலை 8:00 மணிக்கு | கிருத்திகை மஹாஅபிஷேகம் |
| | | காலை 8:30 மணிக்கு | கொடியேற்றுதல் |
| | | மாலை 7:00 மணிக்கு | ஸ்ரீ பாலகணபதி - ஸ்ரீ பாலமுருகன் ஆலயச்சுற்றுலா |
| 13-03-2019 | புதன் | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | மாலை 7:00 மணிக்கு | சந்தன காப்பு |
| 14-03-2019 | வியாழன் | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | மாலை 4:00 மணிக்கு | உற்சவ மூர்த்தி மஹா அபிஷேகம் |
| | | மாலை 7:00 மணிக்கு | சந்தன காப்பு |
| 15-03-2019 | வெள்ளி | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | மாலை 6:00 மணிக்கு | குத்துவிளக்கு பூஜை |
| | | மாலை 6:00 மணிக்கு | திரிபுரசுந்தரி சந்தனகாப்பு |
| 16-03-2019 | சனி | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | மாலை 6:00 மணிக்கு | பக்தி கான இசை |
| | | மாலை 7:00 மணிக்கு | சந்தனகாப்பு |
| 17-03-2019 | ஞாயிறு | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | மாலை 6:30 மணிக்கு | திருக்கல்யாணம் - ஸ்ரீ முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் ஆலயச்சுற்றுலா |
| 18-03-2019 | திங்கள் | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | மாலை 4:30 மணிக்கு | சோமவார பிரதோஷம் |
| | | மாலை 7:00 மணிக்கு | சந்தனகாப்பு |
| 19-03-2019 | செவ்வாய் | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | மாலை 7:00 மணிக்கு | சந்தனகாப்பு |
| 20-03-2019 | புதன் | காலை 8:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | மாலை 7:00 மணிக்கு | சந்தனகாப்பு |
| 21-03-2019 | வியாழன் | காலை 5:00 மணிக்கு | மஹா அபிஷேகம் |
| | | காலை 7:00 மணிக்கு | திருக்காவடிகள் புறப்பாடு |
| | | காலை 11:00 மணிக்கு | 508 லிட்டர் பால் அபிஷேகம் |
| | | பகல் 12:00 மணிக்கு | அன்னதானம் |
| | | மாலை 7:00 மணிக்கு | ஸ்ரீ பாலகணபதி, ஸ்ரீ பாலமுருகன் திருவீதி உலா |
| 24-03-2019, | ஞாயிறு | மாலை 6:00 மணிக்கு | இடும்பன் பூஜை |

ஸ்ரீ பாலமுருகன் தேவஸ்தான அறக்கட்டளை அறப்பணிகளுக்கான நன்கொடைகளுக்கு
வருமான வரிச்சட்டம் 80-G (5)ன் கீழ் வரி விலக்கு உண்டு.

Indian Overseas Bank    Maninagar Branch    A/c No.: 246501000000499    IFSC: IOBA0002465

## பூஜை கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| திருக்கல்யாண உற்சவம் | ₹ 2,101/- | பால்குடம் | ₹ 351/- |
| மகா அபிஷேகம் | ₹ 1,501/- | காவடி | ₹ 301/- |
| சந்தனகாப்பு | ₹ 1,501/- | குத்துவிளக்கு பூஜை | ₹ 201/- |